**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில்**

**2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 08-ம் தேதி திங்கள் கிழமை**

**<u>குற்றவியல் பல்வகை மனு எண். 682/2026</u>**

**சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 131/2026**

**<u>மனு நாள் 02.06.2026 பிரிவு 497 மற்றும் 503 பி.என்.எஸ்.எஸ்.</u>**

முத்துமாரி,
த/பெ. பேச்சி

.....மனுதாரர் / வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை ஆய்வாளர்,
சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர் / குற்ற முறையீட்டாளர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், மேற்படி எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினரால் பிரிவுகள் 115(2), 118(1), 191(2), 296(b), 309(6), 329(4), 351(3) and 4 of TNPHW Act –ன் கீழ் வழக்கு பதிவு செய்து, தனக்குச் சொந்தமான TN 58 BX 7187 என்ற பதிவெண் கொண்ட Maruthi Suzuki Baleno Delta Petrol Car மீது மேற்படி காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு, கைப்பற்றிச் செல்லப்பட்டு இயங்காமல் காவலில் இருந்து, மேற்படி வாகனத்தை குற்ற முறையீட்டாளரால் கைப்பற்றி பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும், மேற்படி வாகனம் பாதுகாப்பற்று மழையிலும், வெயிலிலும் இருக்கும்பட்சத்தில் பழுதடைய வாய்ப்புள்ளது என்றும், மேற்படி வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் சமூகம் மன்றம் விதிக்கும் நிபந்தனைகளை கடைபிடிக்க தயாராய் உள்ளதாகவும், சமூகம் நீதிமன்றம் வேண்டும்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திப்போக தயாராய் உள்ளதாகவும், மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகம் தன்னிடம் உள்ளது என்றும், மேற்படி வாகனத்தை விற்பனை செய்யவோ மற்றும் எவ்வித உருமாற்றமும் செய்யமாட்டேன் என்றும் உறுதி கூறுவதாகவும், தனது தொழிலுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்றும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், ஒப்படைவு செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 131/2026 வழக்கானது புல் னவிசாரணையில் இருந்து வருகிறது என்றும், இவ்வழக்கின் இன்னும் 3 எதிரிகள் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வருவதாலும், மேற்படி வழக்கின் சொத்தான TN 58 BX 7187 என்ற பதிவெண் கொண்ட Maruthi Suzuki Baleno Delta Petrol Car வாகனமானது நிலைய பாதுகாப்பில்

பாதுகாப்பாக இருந்து வருகிறது என்றும், நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் வழக்கின் சொத்தான மேற்படி காரை தர தயாராக உள்ளதாகவும், மேற்படி உரிமையாளரிடம் கொடுக்கும்பட்சத்தல் வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ கூடும் என்பதாலும், உருமாற்றம் செய்யவோ கூடும் என்பதாலும், மேலும், நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் வாகனத்தை மனுதாரிரடம் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபனை தெரிவிப்பதாக என்றும், எடுத்துரைக்கப்பட்டது.

இரு தரப்பும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மேலும், ஆவணங்களை பரிசீலனை செய்கையில், பி.ஆர்.எண்.327/2026-ல் கண்ட சொத்தான TN 58 BX 7187 என்ற பதிவெண் கொண்ட Maruthi Suzuki Baleno Delta Petrol Car மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இயக்கப்படாமல் இருந்தால் பழுதாகிவிடும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாலும், மேலும், வாகனத்தை மனுதாரிரடம் ஒப்படைப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேற்படி வாகனத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

நிபந்தனைகள் :

1. மனுதாரர் தானும், தனக்காக இரு நபர்களும் தலா ரூ.2,00,000/-க்கு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.
3. வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் வாகனத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. வாகனத்தின் நான்கு புறங்களையும் புகைப்படம் எடுத்து புகைப்படத்தையும் அதற்கான சி.டியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
6. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

ஷை நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண் 327/2026 ல் கண்ட TN 58 BX 7187 என்ற பதிவெண் கொண்ட Maruthi Suzuki Baleno Delta Petrol Car ஐ மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

(ஒம்/–எம்.மாரி)
நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.